DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 94/2021
Miscellaneous :
Sessions : PW 8
Deposition of Witness for
எதிரி ஆஜர்

| Name | சரவணன் |
|---|---|
| Father's Name | சச்சுதானந்தம் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 26.09.2024

<u>முதல் விசாரணை</u>

1.) நான் தற்போது பாதுகாப்பு பிரிவு சிஐடி–ல் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 27.12.2019 ம் தேதி 19.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் பாரதி என்பவர் நிலைய பொறுப்பில் இருக்கும் போது மதுராந்தகம் குற்றவியல் நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட கடித எண் 1867/2019 படி இணைப்பில் உள்ள புகாரின் பேரில் அச்சரப்பாக்கம் காவல் நிலைய குற்ற எண் 393/2019 இதச பிரிவுகள் 418, 420–ன் கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

2.) பின்னர் மேல்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சஞ்சீவி மற்றும் அருணாச்சலம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டும், பின்னர் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் முன்பிணை பெற்றுள்ளதால் கைது செய்யவில்லை. பின்னர் பட்டியல் சாட்சி சங்கர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக 418, 420 இதச பிரிவுகளின் கீழ் 21.04.2019 ம் தேதியன்று இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

3). என்னிடம் புகார் கொடுத்து அதன் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட போது கிரைய ஒப்பந்த ஆவணத்தின் அசல் என்னிடம் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. புகார்தாரர் எதிரிக்கு பணம் கொடுத்ததை காட்டும் ஆவணங்கள் என்னிடம் எதுவும் புகார்தாரர் கொடுத்தாரா என்றால் இல்லை. விசாரணையில் அவ்வாறு ஆவணங்கள் எதுவும் இல்லை. எனது விசாரணையில் புகார்தாரர் எங்கு

வைத்து யார் முன்னிலையில் எவ்வளவு பணம் எதிரிக்கு கொடுத்தார் என்று தெரிய வந்ததா என்றால் இல்லை. பொதுவாக தாம்பரத்தில் பணம் கொடுக்கல் வாங்கல் இருந்திருந்தால் அச்சரப்பாக்கத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது.

4). அசல் ஆவணம் காணாமல் போய்விட்டால் நாங்கள் விசாரணை செய்த பிறகு தான் Missing Certificate கொடுக்கப்படும் என்றால் முதலில் சிஎஸ்ஆர் கொடுத்துவிட்டு C.R.B க்கு அந்த தகவலை அனுப்பி அவர்கள் Gazette ல் Publication செய்த பிறகு அவர்கள் கொடுக்கும் பதிலின் படி நாங்கள் Missing Certificate கொடுப்போம். மேலதிகாரி உத்தரவிட்ட பிறகு தான் Missing Certificate கொடுக்கப்படும் என்றால் சரிதான். புகார்தாரர் அசல் ஆவணங்களை என்னிடம் காட்டினாரா என்றால் இல்லை. ஆனால் விசாரணையில் எதிரி பணமோசடி செய்தது தெரிய வந்ததால் வழக்கு தாக்கல் செய்தேன்.

5). நான் அசல் ஆவணங்களை பார்க்காமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரியின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் புகார்தாரருக்கும் இடையே கொடுக்கல் வாங்கல் இருந்திருந்தால் அது சம்பந்தமாக ஆவணங்களை நான் விசாரணையின் போது பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரிதான். புகார்தாரர் வேளச்சேரியில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். புகார்தாரருக்கு மதுராந்தகத்தில் சொத்துக்கள் ஏதேனும் உள்ளதா என்றால் அதுபற்றி தெரியாது. எதிரி புகார்தாரரிடம் பெற்ற கடனை சென்னை உயர்நீதிமன்றத்தில் பெற்ற உத்தரவின் பேரில் திரும்பி புகார்தாரரிடம் செலுத்திவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

6). நான் இறுதி அறிக்கை தாக்கல் செய்திருந்த போதே மேற்படி பணப்பரிமாற்றம் நடந்து முடிந்ததால் நான் இந்த வழக்கை Mistake of Fact அடிப்படையில் முடித்து வைத்திருக்கலாம் என்றால் பணப்பரிமாற்றம் பற்றிய விவரம் தெரியாததால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். புகார்தாரர் பணத்தை பெற்றுக் கொண்ட விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. அசல் ஆவணம் உண்மையாக தொலைந்துவிட்ட காரணத்தினால் தான் எதிரி எங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. அனைத்து விசாரணைக்கு பிறகு தான் Missing Certificate கொடுத்தேன் என்றால் சரிதான். எந்த முகாந்திரமும் இன்றி புகார்தாரர் கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் எதிரிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.